நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

**சி.சி.எண். 155/2020**

2021ம்ஆண்டு செப்டம்பர் திங்கள் 1ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | | **சிவகுமார்** | **வயது** | | **32** |
| **த/பெ.** | **:** | **கணேசன்** | **தொழில்** | **:** | முதல்நிலை காவலர் |
| **ஊர்** | **:** | **ஜோலார்பேட்டை** | **சமயம்** | **:** | |
| **வட்டம்** | **:** | **திருப்பத்தூர்** | **சாதி** | **:** | |
| **மாவட்டம்** | **:** | **திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் ஜோலார்பேட்ண்ட இருப்புபாதை காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணி புரிகிறேன். கடந்த 13.11.2019ம்தேதி காவல் ஆய்வாளர் வெற்றிவேல் என்பவரை கைது செய்து விசாரிக்கும் போது நானும் உதவியாக உடனிருந்தேன். காவல் ஆய்வாளர் சாட்சிகள் முன்னிலையில் எதிரியிடம் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்.ஒப்புதல் வாக்குமூலத்தின் போது எதிரி தான் 3 வழக்குகளில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டார். அவரிடமிருந்து செல்போன் ஒன்றும், 8 கிராம் தங்கக்கட்டி கைப்பற்றுதல் மகஜர் மூலம் சாட்சிகள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். நான் அப்போது உடனிருந்தேன். இவ்வழக்கில் என்னையும் சாட்சியாக காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

எ.த.கு.வி:-

எதிரியை எங்கு வைத்து எத்தனை மணிக்கு கைது செய்தார்கள் என்றால் நடைமேடை எண். 1ல் விடியற்காலை 04.30 மணிக்கு கைது செய்தார்கள்.ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தயாரித்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வைத்து தயார் செய்தார். கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் விசாரணையில் கூறியது போல் எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யப்படவில்லை என்றாலும் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. காவல் ஆய்வாளருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மதமில்லை என்றால் சரியல்ல.

ம. வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

**சி.சி.எண். 155/2020**

2021ம்ஆண்டு செப்டம்பர் திங்கள் 1ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.3 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | | **நரேந்திரகுமார்** | **வயது** | | **36** |
| **த/பெ.** | **:** | **இருசமன்** | **தொழில்** | **:** | முதல்நிலை காவலர் |
| **ஊர்** | **:** | **ஜோலார்பேட்டை** | **சமயம்** | **:** | |
| **வட்டம்** | **:** | **திருப்பத்தூர்** | **சாதி** | **:** | |
| **மாவட்டம்** | **:** | **திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் ஜோலார்பேட்ட்ட இருப்புபாதை காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணி புரிகிறேன். கடந்த 13.11.2019ம்தேதி காலை 04.30 மணிக்கு ஜோலார்பேட்டை ரயில் நிலைய நடைமேடை எண்.1ல்காவல் ஆய்வாளர் தலைமையில் நான், மற்றும் அ.சா.2 சிவகுமார் ஆகியோர் குற்ற தடுப்பு பணியில் சோதனை மேற்கொண்டோம். அப்போது சந்தேகத்திற்கு இடமான வகையில் அங்கு இருந்த வெற்றிவேல் என்பவரை விசாரித்த போது, அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால் அவரை காவல் நிலையம் அழைத்து வந்து விசாரித்த போது, அவர் திருட்டு குற்றங்களில் ஈடுப்பட்டது தெரிந்தது. எனவே சாட்சிகள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் எதிரியிடம் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்.ஒப்புதல் வாக்குமூலத்தின் போது எதிரி தான் 3 வழக்குகளில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டார். அவரிடமிருந்து செல்போன் ஒன்றும்,8 கிராம் தங்கக்கட்டி கைப்பற்றுதல் மகஜர் மூலம் சாட்சிகள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். நான் அப்போது உடனிருந்தேன். இவ்வழக்கில் என்னையும் சாட்சியாக காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

எ.த.கு.வி:-

எதிரியை எங்கு வைத்து எத்தனை மணிக்கு கைது செய்தார்கள் என்றால் நடைமேடை எண். 1ல் விடியற்காலை 04.30 மணிக்கு கைது செய்தார்கள்.ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தயாரித்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வைத்து தயார் செய்தார். கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் தயார்

செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் விசாரணையில் கூறியது போல் எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யப்படவில்லை என்றாலும் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. காவல் ஆய்வாளருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மதமில்லை என்றால் சரியல்ல.

ம.வி:-

இல்லை